# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலத்தின் 25-ஆம் ஞாயிறு | 20 செப்டம்பர் 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*


மாதாந்திர நோக்கம்: குடும்பம்: தேடிச்சென்று உதவுதல்

# பெர்ஜலானான் சாலிப் - சிலுவைப்பாதை



பெர்ஜலானான் சாலிப் ஏப்ரல் 2025-ல் ஆசீர்வதிக்கப்பட்டுத் தனது பயணத்தைத் தொடங்கியது. அன்று முதல், இந்த ஒன்பது சிலுவைகளும் மலேசியாவின் ஒன்பது மறைமாவட்டங்கள் முழுவதும் பயணம் செய்து, செப்டம்பர் 2026-ல் சரவாக்கின் சிபுவில் நடைபெற்ற மலேசியா ஆயர் மாநாடு 2026 கொண்டாட்டத்துடன் நிறைவடைந்தன.

பெர்ஜலானான் சாலிப், ஒரு புனிதச் சின்னமாக, மலேசிய கத்தோலிக்கர்களுக்கு ஒரு பக்திச் சடங்காக மாறக்கூடும். ஒன்பது அடி உயரமும் ஐந்து அடி அகலமும் கொண்ட இந்த எளிய சிலுவை,

சாலிப் என்று மலாய் மொழியில் குறிப்பிடப்படும் இது மரத்தால் ஆனது. ஒன்பது சாலிப்களின் (சிலுவைகளை இணைத்து) அமைப்பானது, பெர்ஜலானான் சாலிப்பை வேற்றுமையில் ஒற்றுமை, வேறுபாடுகள் இருந்தபோதிலும் நட்பு, மற்றும் நமது மீட்பருடனான ஒன்றிப்பை ஆழப்படுத்துதல் ஆகியவற்றின் சின்னமாக ஆக்குகிறது.

துன்பம் மற்றும் விரக்தியின் அனுபவம் தனிப்பட்டதல்ல, மாறாக உலகளாவியது என்பதை பெர்ஜலானான் சாலிப் நமக்கு நினைவூட்டுகிறது. கத்தோலிக்கர்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் மீதுள்ள கண்ணியத்துடனும் அன்புடனும் சிலுவையைத் தழுவிக்கொள்ள வேண்டும். பெர்ஜலானான் சாலிப்பை உருவாக்கும் 9 சாலிப்களின் அமைப்பானது, நமது வாழ்க்கையின் வெவ்வேறு பகுதிகள் தனித்தனியாக இல்லை, மாறாக அனைத்தும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. எனவே, நாம் இனி ஒரு தனித்த சிலுவையைக் காண்பதில்லை, மாறாக ஒரு ஒருங்கிணைந்த (சிலுவையை)சாலிப்பைக் காண்கிறோம்.

திருமுழுக்கு என்னும் உறுதிமொழியும் அதைவிட முக்கியமாக சிலுவையில் அறையப்பட்ட இயேசுவும், நாம் தனியாக இல்லை என்பதை நமக்கு உறுதிப்படுத்துகின்றன - நமது குடும்பங்கள், நமது திருஅவை, சமூகம் மற்றும் இயற்கை கூட  தனியாக இல்லை. நற்செய்தி உறுதிப்படுத்துவதைப் போலவே: “இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” (மத்தேயு 28:20) இயேசு தமது அன்புடன் நம்முடன் உடன் இருக்கிறார், மேலும் இந்த அருளால், வாழ்க்கையில் உள்ள ஒவ்வொரு தடைகளையும் கடந்து செல்ல நாம் வலுவூட்டப்படுகிறோம்.

மலாய் மொழிச் சொற்றொடரான, "Berat sama dipikul, ringan sama dijinjing" என்பது, திருமறையில் காணப்படும் ஞானத்தை அழகாக விவரிக்கிறது: “தனிமனிதராய் இருப்பதைவிட இருவராய் இருப்பது மேல். ஏனெனில்ஒருவனைவிட இருவர் மேலானவர்கள்; ஏனெனில் அவர்கள் சேர்ந்து உழைப்பதால், அவர்களுக்கு மிகுந்த பயன் கிடைக்கும். ஒருவர் விழுந்தால் அடுத்தவர் அவரைத் தூக்கிவிடுவார். தனிமனிதராய் இருப்பவர் விழுந்தால், அவரது நிலைமை வருந்ததக்கதாகும். ஏனெனில் அவரைத் தூக்கிவிட எவருமில்லை”(சபை உரையாளர் 4:9-10).

ஆகவே, ஒவ்வொரு நாளையும் உங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு தொடங்குங்கள்; கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள், ஆனால் தனியாக அல்ல, இந்த நம்பிக்கை மற்றும் வாழ்க்கைப் பயணத்தைத் தொடரும்போது, ஒன்றாக நடங்கள். ✤

**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா 55: 6-9
திருப்பாடல் 145: 2-3, 8-9, 17-18
பிலிப்பியர் 1: 20 - 24, 27
மத்தேயு 20: 1-16

கிறிஸ்துவின் சிலுவையானது, இறைவனின் முழு அன்பையும், அவருடைய அளவற்ற கருணையையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

*- திருத்தந்தை பிரான்சிஸ்*


INTERNAL CIRCULATION ONLY
BUL 38/2026

வெளியீடு: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | Email: api@archkl.org